பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 10 செவ்வாய்க்கிழமை 24.05.2022 கதிர் 93

## அதிகரித்தது பஸ் கட்டணம்

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்கள் மற்றும் தனியார் பஸ்களின் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

நேற்றிரவு எரிபொருள் அதிகரிப்பைத் தொடர்ந்து இவ்வாறு கட்டண அதிகரிப்பு ☞2

# மீண்டும் எகிறியது எரிபொருள்களின் விலை!

இலங்கையில் இன்று அதிகாலை 3 மணி முதல் அமுலாகும் வகையில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சால் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில்,

* ஒரு லீற்றர் ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை 82 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 338 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் புதிய விலை 420 ரூபாவாகும்.
* ஒரு லீற்றர் ஒக்டேன் 95 ரக பெற்றோல் 77 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

337 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் புதிய விலை 450 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

* ஒரு லீற்றர் ஓட்டோ டீசல் 111 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 400 ரூபா வரையிலும்.
* சுப்பர் டீசல் ஒரு லீற்றர் 116 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 445 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படும் என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.



# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற 67 பேர் வசமாகச் சிக்கினர்!

## திருமலையில் கடற்படை அதிரடி






(ந.லோகதயாளன்)

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாட்டுக்குச் செல்வதற்கு முயற்சித்த 67 பேர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, சல்லி - சாம்பல் தீவில் நேற்றிரவு முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

இரண்டு ஓட்டோக்களும், கப் வாகனம் ஒன்றும் சந்தேக நபர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களில் பயணித்த 12 ஆண்கள் கைது செய்யப்பட்டமையுடன், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் சட்டவிரோதமாக நாட்டிலிருந்து செல்வதற்குப் படகில் தயாராகவிருந்தவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ☞2

## ரணிலுக்குப் பிள்ளையானும் ஆதரவு

### அமைச்சுப் பதவி குறித்து முடிவு இல்லையாம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டிலேயே தாம் இருக்கின்றேன் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தாம் அரசுடனேயே இணைந்திருக்கிறேன் எனவும் தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார். ☞2

## எரிபொருள் விநியோகத்துக்கு இன்று தொடக்கம் வரையறை

* மோ.சைக்கிளுக்கு 2,500 ரூபா
* ஓட்டோவுக்கு 3,000 ரூபா
* கார் மற்றும் வான்களுக்கு 10,000 ரூபா



எரிபொருள் விநியோகத்துக்கு இன்று முதல் வரையறை அமுலாக்கப்பட்டுள்ளது என வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

குறித்த வரையறைக்கு அமைய, மோட்டார் சைக்கிள்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கும், ஓட்டோக்களுக்கு 3 ஆயிரம் ரூபாவுக்கும் மாத்திரமே ☞2

## ஓட்டோ கட்டணமும் அதிகரிப்பு

எரிபொருள் விலையேற்றத்தையடுத்து போக்குவரத்துக் கட்டணத்தை அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஓட்டோவுக்கான ஆரம்ப கட்டணமாக 100 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஓட்டோ ஆரம்பக்கட்டணம் 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப கிலோ மீற்றருக்கு அடுத்தபடியாக, ☞2

## ஜனாதிபதி ஆட்சி முறைமை முற்றாக ஒழிக்கப்படவேண்டும்

### '21' வரைவு திருப்தி இல்லை என்கிறார் சஜித்



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

அத்துடன், அரசால் முன்வைக்கப்பட்டுள்ள 21 ஆவது திருத்தச் சட்ட வரைபு திருப்திகரமாக இல்லை என்றும் அவர் ஊடகங்களிடம் சுட்டிக்காட்டினார்.

எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு உள்ளிட்ட ☞2

## யாழில் ஒரு வருடமாக திருடி வந்தவர் கைது!

### நகை, பணம் மீட்பு



யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வருடமாக 6 வீடுகளில் களவில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்., அரியாலை - பூம்புகார் பகுதியைச்சேர்ந்த 36 வயதுடைய நபரே யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். ☞2

## யாழில் ஒரு வருடமாக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த நபரைக் கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்தபோது, கடந்த 2021ஆம் ஆண்டு மற்றும் 2022ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் 6 வீடுகளில் தான் தங்க நகைகள், பணம் என்பவற்றைக் களவாடினேன் என்று தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒரு தொகை நகை மற்றும் பணம் என்பவற்றை மீட்டுள்ளோம் எனவும், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜனாதிபதி ஆட்சி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விடயங்களை மையப்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள 21 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் யோசனை முன்வைத்துள்ளார்.

## ஓட்டோ கட்டணமும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயணிக்கும் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் 80 ரூபா விதம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாடசாலைப் போக்குவரத்துக் கட்டணம், வாடகை வண்டி சேவை உள்ளிட்ட மேலும் சில போக்குவரத்துச் சேவை கட்டணங்களும் எகிறவுள்ளன.

## எரிபொருள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எரிபொருள் நிலையங்களிலும் எரிபொருள் விநியோகிக்கப்படும்.

இதேவேளை, கார் மற்றும் வான் ஆகியனவற்றுக்கு 10 ஆயிரம் ரூபாவுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும்.

பஸ்கள் மற்றும் ஏனைய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் வாகனங்களுக்கு இந்த வரையறைகள் இல்லை எனவும் வலுசக்தி அமைச்சர் மேலும் கூறினார்.

## ரணிலுக்குப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எவ்வாறாயினும், அமைச்சுப் பதவியை ஏற்பதா? இல்லையா? என்பது தொடர்பில் இதுவரை எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என்றும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் எம்.பி. மேலும் கூறியுள்ளார்.

## சட்டவிரோதமாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆட்கடத்தலில் ஈடுபடும் 5 சந்தேகநபர்களும் இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுக்குச் செல்வதற்கு தயாராகவிருந்த 45 ஆண்களும், 7 பெண்களும், சிறு பிள்ளைகள் மூவரும் குறித்த படகில் இருந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், அம்பாறை, இரத்தினபுரி, கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்களை நிலாவெள மற்றும் உப்புவெள பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கைக் கடற்படை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## அதிகரித்தது ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறைந்தபட்சம் 19.5 சதவீதத்தால் பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், தற்போது குறைந்தபட்ச பஸ் கட்டணமாக 32 ரூபா அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாட்டின் துன்பியல் நிலைமை

மீண்டும் எரிபொருள் விலைகள் உயர்ந்து இருக்கின்றன. வாகன போக்குவரத்து என்பது இனி நினைத்துப் பார்க்க முடியாத விடயமாக அந்நியமாகும் சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது.

போக்குவரத்து நடமாட்டத்தைச் சுருக்கி மக்கள் மீண்டும் மாட்டு வண்டில் யுகத்துக்குள் நுழைய வேண்டி நேருமோ என்ற அச்சம் உருவாகியுள்ளது

கட்டுமட்டில்லாமல் அதிகரித்துவரும் விலை உயர்வு, இன்று எரிபொருள் விலை அதிகரிப்புடன் இறக்கை கட்டி பறக்கப் போகின்றது.

கடந்த வருடங்களில் ஒற்றை இலக்கத்தில் இருந்த பணவீக்கம் கடந்த மாதத்தில் 33.8 வீதமாக உயர்ந்துள்ளது. இது நாட்டின் பொருளாதாரத்தின் மிக மோசமான நிலையை எடுத்துக் காட்டுகிறது. நிலையான வைப்புகளுக்கும் கடன்களுக்கும் வங்கிகள் அறவிடும் வட்டி வீதத்தில் மூன்று மடங்குக்கு பணவீக்கம் இருக்குமானால், வங்கிகளின் வட்டி வீதமும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

எரிபொருள் விலை உயர்வு இன்று அதிகாலை நடைமுறைக்கு வர முன்னர் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர எரிபொருள் வகைகளின் விற்பனையால் லீற்றர் ஒன்றுக்கு அரசுக்கு ஏற்படும் நஷ்டத்தை விலாவாரியாக – விரிவான கணக்குகளுடன் – வெளியிட்டிருந்தார். அதில் லீற்றருக்கு ஏற்படும் நஷ்டத்திற்கு ஏறத்தாழ சமனான தொகைக்கு இன்றைய விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

அதாவது, புதிய விலை அதிகரிப்பின்படி மசகு எண்ணெய் இறக்குமதி மற்றும் அது தொடர்பான அனைத்து செலவினங்களும் உள்ளடங்கிய விலைக்கு எரிபொருள்களின் புதிய கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றது. இனி, டொலர் பெறுமதி மாற்றத்தினால் ஏற்படும் சரிவு அல்லது ஏற்றத்தைத் தவிர, வேறு மாற்றங்கள் இன்றி எரிபொருளை நஷ்டம் இல்லாமல் அரசு விற்க முடியும். மண்ணெண்ணை தவிர மற்றைய எரிபொருள் விற்பனையில் அரசு கையை சுட்டுக் கொள்கின்றது என்ற கதைக்கே இனி இடமில்லை.

மக்கள் கொடுக்கும் விலைக்கு சமனான பெறுமதிக்கு எரிபொருளை அரசு வழங்கப் போகின்றது. மானியம், நஷ்டம், பாதிப்பு என்ற குழப்பம் ஏதுமில்லை.

அந்த விலையில் விற்கும் போதாவது எரிபொருளைத் தடையின்றி – வரிசையில் மணிக்கணக்காக காத்துக்கிடக்க வைக்காமல் – அரசாங்கத்தால் வழங்க முடியுமா என்பது கேள்விக்குறியே.

எரிபொருளுக்கான முழு கட்டணத்தையும் – சேவை கட்டணம் உட்பட அனைத்தையும் – மக்களிடமே அறவிட்ட பின்னரும், எரிபொருள் வாங்குவதற்கு அந்நிய செலாவணி கையிருப்பு இல்லை என்று அரசு புலம்பும் என்பது நிச்சயம்.

இந்த விலை உயர்வோடு பஸ்களின் ஆகக் குறைந்த கட்டணம் 27 ரூபாவில் இருந்து 35 ரூபாவாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பஸ்களில் ஏறுவதற்கு மட்டுமே 35 ரூபா தேவை என்றால், தூர இடங்களுக்கான பஸ் சேவை கட்டணங்கள் எப்படி அமையும் என்பது நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது. மக்கள் இடம்பெயர்வுகளை – வாகனப் போகுவரத்தை – குறைத்து, வாழும் இடத்தில் முடங்கிக் கொள்ள வேண்டியதுதான்.

பொருளாதாரம் இத்தகைய மோசமான கட்டத்தை அடைந்துள்ள நிலையில் அதற்குக் காரணமாக அமைந்த சூத்திரதாரிகள் அதிகாரப் பதவிகளில் ஆனந்தமாக தொடர்ந்தும் கோலோச்சுகின்றனர். இதுதான் நாட்டின் துன்பியல் நிலைமை.

# மருந்துகள் பற்றாக்குறையால் நாட்டில் மரணங்கள் நிகழலாம்

## மருத்துவர்கள் எச்சரிக்கை

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்து தட்டுப்பாட்டால் மரணங்கள் நிகழலாம் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

அத்தியாவசிய மருந்துகள் இல்லாததால் மருத்துவர்கள் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகளை ஒத்திவைக்க வேண்டியிருந்தது என்று மருத்துவர்களை மேற்கோள்காட்டி ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

80 வீதமான மருந்துகள் இலங்கையால் இறக்குமதி செய்யப்படுகின்றன. எனினும், அந்நியச் செலாவணி தட்டுப்பாடு காரணமாக, மருந்து இறக்குமதி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பல மருந்துகளுக்கு சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மஹரகம வைத்தியசாலை புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் நாட்டின் முதன்மையான வைத்தியசாலையாகும். இதில் 950 படுக்கைகள் உள்ளன.

ஆனால் அங்குள்ள நோயாளிகள், அவர்களது உறவினர்கள், மருத்துவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மருந்துகள் பற்றாக்குறையால் அத்தியாவசிய சுகாதார பராமரிப்பு மற்றும் அறுவை சிகிச்சையை அதிகாரிகள் ஒத்திவைக்க வேண்டியிருந்தது. இந்த நிலை புற்றுநோயாளிகளுக்கு மிகவும் மோசமானது என வைத்தியர் ரொஷான் அமரதுங்க தெரிவித்தார். சில நாள்களில் நாங்கள் காலையில் அறுவை சிகிச்சைகளைத் திட்டமிடுகிறோம், ஆனால் சில நேரங்களில் மருந்துகள் பற்றாக்குறையால் அந்த நாளில் செய்ய முடியாது என்றும் விரைவில் நிலைமை சீரடையவில்லை என்றால், பல நோயாளிகள் இறக்கும் தறுவாயில் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டன!

எரிபொருள் விலை திருத்தத்துக்கு அமைய பஸ் போக்குவரத்து கட்டணம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கான கட்டணங்களில் திருத்தத்தை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இன்று (செவ்வாய்க் கிழமை) நண்பகல் 12 மணிக்குப் பின்னர் பஸ் கட்டணத்தை அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்த அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, குறைந்தபட்ச பஸ் கட்டணம் 5 ரூபாவால் அதிகரிக்கப்படுமென குறிப்பிட்டுள்ளார்.

# நானுஓயாவில் கோர விபத்து ஒருவர் சாவு; நால்வர் காயம்!

நானுஓயா – வங்கிஓயா தோட்டத்தில் நேற்று (திங்கட்கிழமை) மரம் இழுப்பதற்காக வந்திருந்த வாகனம், சுமார் 30 அடி பள்ளத்தில், குடை சாய்ந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 43 வயதுடைய கினிகத்தனை பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# மைத்திரிக்கு அறிவித்த பின்பே அமைச்சுப் பதவியை ஏற்றேன்

## அமைச்சர் அமரவீர விளக்கம்



அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றுள்ளமை சுதந்திர கட்சியின் அரசியல் செயற்பாடுகளுக்குத் தடையாக அமையாது.

கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கு அறிவித்ததன் பின்னரே அமைச்சு பதவியை பொறுப்பேற்றேன். விவசாயிகளுக்கு சாதகமான தீர்மானங்களை முன்னெடுக்க அவதானம் செலுத்தப்படும் என விவசாயத்துறை மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாயத்துறை அமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டமையை தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாடு பாரிய நெருக்கடியை எதிர் கொண்டுள்ள போது பொறுப்பை ஏற்க முன்வருவது அவசியமானது. ஒருசில காரணிகளுக்காக நிர்வாகக் கட்டமைப்பை பாதிப்பிற்குள்ளாக்க முடியாது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் அமைச்சு பதவிகளை வகிப்பதால் கட்சியின் அரசியல் செயற்பாடுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.


அமைச்சு பதவியை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் தொடர்ந்து வலியுறுத்தியதை கருத்திற் கொண்டு, கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கு அறிவித்ததன் பின்னரே அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றேன். விவசாயத்துறையில் தாக்கம் செலுத்தியுள்ள தவறான தீர்மானங்களை மாற்றியமைக்க உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

எரிபொருள் வரிசையில் காத்திருக்கும் விவசாயிகள், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் சூழலை ஏற்படுத்தும் வகையில் விசேட திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு எரிபொருளை விநியோகிப்பது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் வலுசக்தி அமைச்சருடன் முதல்கட்ட பேச்சுகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளேன். உரம் தொடர்பான கொள்கை மாற்றியமைக்கப்படும். விவசாயிகளுக்கு சாதகமாக அமையும் தீர்மானங்கள் செயற்படுத்தப்படும். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
செவ்வாய்க்கிழமை 24.05.2022

# ரஷ்ய பிரதிநிதிகளால் புடினை கொல்ல முயற்சி

## உக்ரைன் உளவுத்துறை தலைவரின் தகவலால் பரபரப்பு



ரஷ்ய அதிபர் புடினை கொலை செய்ய முயற்சி நடந்ததாக உக்ரைன் உளவுத்துறை தலைவர் கூறியமை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. நேட்டோ அமைப்பில் இணைய எதிர்ப்பு தெரிவித்து, கடந்த பெப். 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. போர் தொடங்கிய முதல்நாளே ரஷ்ய படைகள், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி மற்றும் அவரது குடும்பத்தினரை கொலை செய்யும் நோக்கில் பரசூட் மூலம் இறங்கி தாக்குதல்கள் நடத்தின எனவும், அவர்களிடம் இருந்து முதலில் குடும்பத்தினரும், தொடர்ந்து ஜெலன்ஸ்கியையும் பத்திரமாக மீட்டோம் என உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், 2 மாதம் முன்பே ரஷ்ய அதிபர் புடினை கொலை செய்யும் முயற்சி நடந்ததாக உக்ரைன் உளவுத்துறை தலைவர் கைரிலோ புடானோவ் தெரிவித்துள்ளார் என ரஷ்யாவின் உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'உக்ரைன் மீது படையெடுத்த பின்னர் ரஷ்ய அதிபர் புடினை, ஆர்மீனியா, அஜர்பைஜான், ஜார்ஜியா மற்றும் தெற்கு ரஷ்யாவின் சில பகுதிகளை உள்ளடக்கிய காகசஸ் பிராந்தியத்தின் பிரதிநிதிகள் படுகொலை செய்ய முயன்றனர். காகசஸின் பிரதிநிதிகளால் தாக்கப்பட்டார். இது ஒரு முற்றிலும் தோல்வியுற்ற முயற்சி. இது சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு நடந்தது' என்று தெரிவித்தார். புடின் ரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என கூறப்படும் நிலையில், இந்த தகவல் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### ரஷ்ய வீரருக்கு வாழ்நாள் சிறை

உக்ரைன் போரில் ஏராளமான ரஷ்ய வீரர்களை உக்ரைன் ராணுவம் சிறை பிடித்துள்ளது. அவர்களிடம் போர் குற்றம் தொடர்பான விசாரணை தொடங்கி நடந்து வருகிறது. இதில், தலைநகர் கீவ்வில் சைக்கிளில் சென்ற சாமானியர் ஒருவரை, 21வது ரஷ்ய வீரர் சுட்டுக்கொன்றார் என கூறப்படுகிறது. இது, போர்க் குற்றமாக கருதப்பட்டு அவரிடம் விசாரணை நடந்தது. அவருக்கு வாழ்நாள் சிறைத் தண்டனை விதித்து உக்ரைன் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. உக்ரைன் போர் குற்ற வழக்கில் தண்டனை வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும். 2,500 உக்ரைன் வீரர்களை ரஷ்யா சமீபத்தில் கைது செய்துள்ளது. அவர்களிடமும் ரஷ்யா போர் குற்ற விசாரணை நடத்த இருப்பது குறிப்பிடத்தக்கது.

போரை தீவிரப்படுத்தி உள்ள ரஷ்யா மீது அதிகளவிலான தடைகளை விதிக்க வேண்டும் என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கோரிக்கை விடுத்துள்ளார். குறிப்பாக, அனைத்து ரஷ்ய வங்கிகள், ரஷ்ய எண்ணெய் ஏற்றுமதி, ரஷ்யாவுடனான அனைத்து வர்த்தகங்களுக்கும் தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்.

# ஆபத்தான விளையாட்டு வேண்டாம் சீனாவுக்கு ஜோ பைடன் எச்சரிக்கை



தாய்வான் விடயத்தில் சீனாவின் தலையீடு ஆபத்துடன் விளையாடுவதற்கு சமமாகும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறி உள்ளார். ஜப்பான் தலைநகர் டோக்கியோ நகரில் இன்று குவாட் மாநாடு தொடங்கியது. அதில் பங்கேற்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வந்துள்ளார். அவர் நிருபர்களிடம் கூறுகையில், 'உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரைனின் சுதந்திரத்திற்கு எதிராக செயல்படும் ரஷ்யாவின் படையெடுப்பை முறியடிக்க உக்ரைனுக்கு அமெரிக்கா பல உதவிகளை செய்து வருகிறது.

தற்போது சீனாவும், 'ஒருங்கிணைந்த சீனா' என்ற கொள்கையின் அடிப்படையில் அதன் அண்டைநாடான தாய்வான் மீது படையெடுக்க திட்டமிட்டுள்ளது. அவ்வாறு சீனா செய்தால், அது ஆபத்துடன் விளையாடுவதற்கு சமமாகும். தாய்வான் மீது சீனா படையெடுத்தால், அந்நாட்டை பாதுகாக்க அமெரிக்கா களத்தில் இறங்கும். தாய்வானுக்கு ஆதரவாக அமெரிக்க ராணுவம் செயல்படும்' என்றார்.



# இராணுவ ஆட்சிக்கு எதிராக சூடானில் மக்கள் போராட்டம்

சூடானில் ராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் மீது ராணுவம் அடக்குமுறையை கையாண்டதால் சில இடங்களில் கலவரம் வெடித்தது. ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் 2019ம் ஆண்டு அதிபர் ஓமரல் பக்சேவின் சர்வாதிகார ஆட்சி, மக்கள் கிளர்ச்சி காரணமாக அகற்றப்பட்டது. இதையடுத்து புதிய அரசை அமைக்க ஜனநாயக ரீதியிலான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், ராணுவம் அதிகாரத்தை கைப்பற்றியது. இதற்கு எதிராக மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் என தெரிகிறது. இந்நிலையில் தலைநகர் கார்டோ மற்றும் ஓம்டர்மன் நகரங்களில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். அவர்களை பாதுகாப்பு படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசி கலைத்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த போராட்டக்காரர்கள், பதிலுக்கு பாதுகாப்பு படையினர் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. ஒருபக்கம் கலவரம் வெடித்தாலும், நகரின் பிற பகுதிகளில் மக்கள் அமைதியான வழியில் கொடிகளை ஏந்தி பேரணி நடத்தினர். அப்போது ராணுவ அதிகாரிகளுக்கு எதிராக அவர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

# 10 கோடி பேர் அகதிகள் உலகம் முழுவதும்

வரலாற்றில் முதல் முறையாக, உலகளவில் அகதிகளின் எண்ணிக்கை 10 கோடியாக அதிகரித்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. இதுகுறித்து, ஐ.நாவின் அகதிகளுக்கான ஆணையர் பிலிப்போ கிராண்டி கூறுகையில், "எத்தியோப்பியா, பர்கினோ பாசோ, மியன்மார், நைஜீரியா, ஆப்கானிஸ்தான், காங்கோ நாடுகளில் ஏற்பட்ட வன்முறை, குழுக்களிடையேயான மோதல்களால் கடந்த ஆண்டு இறுதியில் உலகளவில் அகதிகள் எண்ணிக்கை 9 கோடி என இருந்தது. தற்போது, உக்ரைனில் நடந்து வரும் போரால் இதுவரை இல்லாத அளவில் 10 கோடி ஆக அதிகரித்துள்ளது.

10 கோடி என்பது உலக மக்கள் தொகையில் 1 சதவீதம் ஆகும். இதில் அகதிகள் மட்டுமல்லாமல் வன்முறைகள், மனித உரிமை மீறல்கள், அடைக்கலம் கோருவோர் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளவர்களும் அடங்கும். 53.2 சதவீதத்தினர் சொந்த நாட்டிலேயே அகதிகளாக உள்ளனர். உக்ரைன் போரில் வீடு, உடைமைகளை இழந்தவர்களுக்கு மனிதாபிமான ரீதியில் பல நாடுகள் உதவி அளிக்கின்றன. இது உற்சாகம் அளிக்கும் வகையில் உள்ளது" என்றார்.



# இந்தியாவை வழி நடத்துமளவுக்கு பா.ம.கவிடம் திட்டங்கள் 2026 இல் வெற்றி நிச்சயமென அன்புமணி ராமதாஸ் தெரிவிப்பு

திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளரும், முன்னாள் நகர்மன்றத் தலைவருமான கே.என்.சேகர் தலைமையில் பா.ம.க. பொதுக்குழுக் கூட்டம் திருமுல்லைவாயலில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் எம்.பி. கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

தமிழகத்தின் முன்னேற்றந்தான் பா.ம.கவின் இலக்காகும். அதிகாரம் இல்லாமலேயே தமிழகத்திற்கு பல முன்னேற்றங்களைச் செய்து வந்துள்ளோம். நம்மிடம் அதிகாரம் இருந்தால் மேலும் பல முன்னேற்றங்களைச் செய்து தர முடியும்.

தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு பா.ம.கவிடம் தீர்வு, செயல் திட்டங்கள் எல்லாம் உள்ளன. பாடசாலை, கல்லூரி மாணவர்கள் குடிப்பழக்கம், கஞ்சா உள்ளிட்ட போதைகளுக்கு அடிமையாகி வருகின்றனர். வருகின்ற தலைமுறையை காக்க 2026 இல் பா.ம.க. ஆட்சிக்கு வரவேண்டும்.

திராவிட மொடல் என அவர்கள் கூறுகின்றனர். நாம் பாட்டாளி மொடல் எனக் கூறி வருகிறோம். தமிழகம் முன்னேற்றம் அடையவில்லை. தமிழகத்தை ஜார்க்கண்டோடு ஒப்பிடக் கூடாது. சிங்கப்பூருடன் தான் ஒப்பிட வேண்டும்.

தமிழ்நாட்டில் சாராயக்கடைகள் இருக்கக்கூடாது. பெண்களுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும். வேலையின்மையை ஒழிக்க வேண்டும். விவசாயிகள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இதுதான் பாட்டாளி மொடல் ஆகும். தமிழக மக்கள் பா.ம.கவுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். நம் மீது மக்களுக்கு நம்பிக்கை வந்துள்ளது.



அதனை நாம் வாக்கு வங்கிகளாக மாற்ற வேண்டும். இந்தியாவை வழி நடத்துகிற அளவுக்கு பா.ம.கவிடம் செயல்திட்டங்கள் உள்ளன. பா.ம.கவிடம் ஆட்சி அதிகாரம் இருந்தால், தமிழகத்தில் 75 சதவீதத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். ஏரிகளை மூடி குடியிருப்புகளை கட்டியதுதான் திராவிட மொடலாகும்.

தொலைநோக்குப் பார்வை திராவிடக் கட்சிகளிடம் இல்லை. சென்னையை சுற்றி 10 புதிய ஏரிகளை உருவாக்க வேண்டும். திராவிடக் கட்சிகளிடம் பணம் உள்ளது.

நம்மிடம் உழைப்பு உள்ளது. 2026 இல் உழைப்பு நிச்சயம் வெற்றி பெறும். பா.ம.க. கண்டிப்பாக ஆட்சிக்கு வரும். என்று அன்புமணி ராமதாஸ் தனது உரையில் குறிப்பிட்டார்.




## முதல் தவணை தடுப்பூசியை 44 லட்சம் பேர் செலுத்தவில்லை

தமிழகத்தில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி முதல் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. தடுப்பூசி செலுத்தும் பணி ஓர் இயக்கமாக மாற்றப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மெகா தடுப்பூசி சிறப்பு முகாம்கள் வாரந்தோறும் நடத்தப்பட்டதன் மூலம் ஏராளமானோர் பயனடைந்தனர். ஆனாலும், இன்னும் 44 லட்சம் பேர் முதலாவது தவணை தடுப்பூசி கூடப் போடாமல் இருக்கின்றனர் என சுகாதாரத் துறை கவலை தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் மையங்களில் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. இதன்மூலம் 12 லட்சம் பேர் பயனடைந்தனர். தற்போது, மாதத்திற்கு ஒரு முறை சிறப்பு முகாம்கள் மூலம் தடுப்பூசி செலுத்த சுகாதாரத்துறை ஏற்பாடு செய்து வருகிறது. .

இந்த நிலையில் தமிழகத்தில் இன்னும் ஒரு கோடியே 66 லட்சம் பேர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாமல் உள்ளனர் என சுகாதாரத்துறை புள்ளி விவரம் தெரிவிக்கின்றது. அதில் முதல் தவணை தடுப்பூசி மட்டும் 44 லட்சத்து 4 ஆயிரத்து 893 பேர் இதுவரையில் செலுத்திடாமல் உள்ளனர்.

இரண்டாம் தவணைத் தடுப்பூசி செலுத்தத் தகுதியுள்ள ஒரு கோடியே 22 லட்சத்து 68 ஆயிரத்து 818 பேர் இதுவரை அதனைச் செலுத்திடாமல் இருக்கின்றனர் என தமிழக பொதுச் சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம் தெரிவித்தார்.

ஒரு கோடியே 4 லட்சத்து 93ஆயிரத்து 440 தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன எனவும், அதனால் தகுதி உள்ளவர்கள் உடனடியாக தடுப்பூசிகளைச் செலுத்திக்கொண்டு பாதுகாப்பாக இருக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தமிழகத்தில் கூட்டணி வைத்ததால் காங்கிரஸின் வளர்ச்சி பாதித்துள்ளதாம்



ராஜீவ் காந்தியைக் கொலை செய்த குற்றத்துக்காக தண்டனை பெற்ற பேரறிவாளனை காந்தி குடும்பத்தினர் பெருந்தன்மையாக மன்னித்துள்ளனர். மக்களும் அப்படியே இருக்க வேண்டும்என்று நினைப்பது தவறு. தன்னைச் சுட்ட கோட்சேவை மன்னிக்கும்படி மகாத்மா காந்தி கூறினார். ஆனால் சட்டம் அவரைத் தூக்கில் போட்டது.

அதுபோன்றுதான் பேரறிவாளனை விடுவித்ததை எங்களால் ஏற்க இயலாது. தமிழர் என்பதற்காக அவரை விடுவிக்க வேண்டும் என்று சொல்லப்படுவதை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. கொலை செய்த ஒருவரை நாம் விடுவிக்கலாமா? என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கியபேட்டியில் கேள்வியெழுப்பியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் கொலை-கொள்ளை வழக்குகளில் ஈடுபட்ட சுமார் 500 முதல் 600 பேர் வரை 25 ஆண்டுகளுக்கு மேலாக ஜெயில்களில் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. அவர்களும் தமிழர்கள்தான்.

ராஜீவ் கொலைக் கைதிகள் மேலும் 6 பேரை விடுவிக்க முயற்சி நடப்பதாக சொல்கிறார்கள். அப்படியானால் 1998 ஆம் ஆண்டு கோவை குண்டு வெடிப்பு வழக்கில் கைதாகி சிறையில் இருப்பவர்களையும் விடுவிக்க வேண்டியது தானே? அவர்கள் மீதான குற்றச்சாட்டு இன்னமும் நிரூபிக்கப்படவில்லை. அவர்களை ஏன் விடுவிக்கக் கூடாது? நியாயம் என்பது எல்லோருக்கும் ஒரே மாதிரி இருக்கவேண்டும்.

இதையெல்லாம் உணர்ந்துதான் தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி உருவானது. இத்தகைய முரண்பாடு இருப்பது எல்லோருக்கும் தெரியும். என்றாலும் தி.மு.க. தரப்பிலும் எங்களுடன் கூட்டணியை தொடர்ந்தனர். இந்த கொள்கை முரண்பாடுகள் கூட்டணியை ஒருபோதும் சிதைத்தது இல்லை.

பொது எதிரியை வீழ்த்துவதற்காக மாறுபட்ட கொள்கையை கொண்ட கட்சிகள் ஓர் அணியில் திரள்வது இயல்பானதுதான். அந்த வகையில் மதச்சார்பின்மை என்பதுதான் எங்கள் கூட்டணியின் ஒரே இலக்கு. இந்த நிலையில் கொலைக் குற்றம் செய்தவரை வரவேற்பது ஆச்சரியமாக உள்ளது.

தமிழக காங்கிரசுக்கு நான் தலைவரான பிறகு பல்வேறு கருத்து மோதல்கள் எழுந்தது உண்டு. ஆனால், அதை நான் ஊக்கப்படுத்தியது இல்லை. அதனால்தான் நாடாளுமன்ற, சட்டசபை தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு 72 சதவீத வெற்றி கிடைத்தது.

எனது அனுபவத்தைப் பொறுத்தவரை ஒரு கட்சி வெற்றி பெறுவதற்கு அது செல்வாக்குப் பெற்று இருக்க வேண்டும் என்பது இல்லை. அந்த செல்வாக்கை வாக்குகளாக மாற்றும் திறன் இருந்தால் வெற்றி வாய்ப்பு கிடைக்கும். 1991 ஆம் ஆண்டு எங்களுக்கு அபரிமிதமான செல்வாக்கு இருந்தது. ஆனால், அதை அ.தி.மு.க. அறுவடை செய்தது.

கூட்டணி என்பது கட்சியை மேலும் மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைய வேண்டும். ஆனால், தமிழகத்தில் உருவான அரசியல் கூட்டணிகள் தமிழக காங்கிரஸை வளர்ச்சி பெற செய்ய முடியாமல் செய்துவிட்டன. கூட்டணி என்பது கட்சியை வலுப்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். ஆனால், தமிழகத்தில் காங்கிரஸ் மேற்கொண்ட கூட்டணிகள் கட்சியை பலவீனப்படுத்தி விட்டன என்பதே உண்மை. கூட்டணி அரசியல் காங்கிரஸின் வளர்ச்சியை குறைத்து விட்டது. காங்கிரஸ் உரிய வளர்ச்சியைப் பெறவில்லை.

ஒரு காங்கிரஸ் தலைவரால் 20 எம்.பிக்கள், 40 எம்.எல்.ஏ.க்களை பெற முடியும் என்று சொல்வது எல்லாம் தவறான வாதமாகும். ஒரு கூட்டணி வலுவாக இருந்தால் கட்சியையும் அது வலுப்படுத்துவதாக இருக்க வேண்டும். இது சொல்வதற்கு எளிது. செயல்படுத்துவதற்கு கடினமாகும்.

தமிழகத்தில் காங்கிரஸை வளர்க்க மிகப் பெரிய தியாகம் செய்ய வேண்டும். சில தேர்தல்களில் நாம் தோற்க நேரிடலாம். மக்கள் உடனடியாக நமக்கு வாக்களித்துவிட மாட்டார்கள். காங்கிரஸ் கட்சி தனித்தன்மையுடன் வலிமையாக இருந்தால் மட்டுமே மக்கள் வாக்களிப்பார்கள்.

தமிழகத்தில் பல கட்சிகள் தோன்றியுள்ளன. சிறந்த பேச்சாளர்கள் அவற்றில் இருந்தனர். மணிக்கணக்கில் பேசுபவர்கள் கூட இருந்தார்கள். ஆனால், எல்லோராலும் வெற்றி பெற இயலவில்லை.

காங்கிரஸின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு அடுத்த 10 ஆண்டுகளுக்கு தேவையான விடயங்களுக்குத் திட்டமிட வேண்டும். இலக்கு நிர்ணயிக்க வேண்டும். கடினமாக உழைக்க வேண்டும். அதன்பிறகுதான் காங்கிரஸை தமிழகத்தில் ஆட்சியில் அமர வைப்பார்கள் என்றார்.



# சென்னைப் பயணத்தையொட்டி பலத்த ஏற்பாடு இந்தியப் பிரதமர் மோடிக்கு 5 அடுக்கு பாதுகாப்பு

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நாளை மறுநாள் சென்னைக்குப் பயணமாகவுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் அவர் 12,400 கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடியின் பயணத்தையொட்டி சென்னையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பத்தாயிரம் பொலிஸார் சென்னை மாநகரம் முழுவதும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமிழக டி.ஜி.பி. சைலேந்திரபாபு, கூடுதல் டி.ஜி.பி. தாமரைக்கண்ணன், பொலிஸ் கமிஷ்னர் சங்கர் ஜிவால் உள்ளிட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள் பிரதமரின் பாதுகாப்பு தொடர்பாக ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்தியப் பிரதமர் மோடி யின் வருகையையொட்டி சென்னையில் 5 அடுக்கு பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# கல்முனை, சாய்ந்தமருதில் வீசும் துர்நாற்றத்தை தடுக்க தவறியமைக்கு எதிராக வழக்குத் தாக்கல்

## மன்றில் ஆஜராகுமாறு சுகாதார அதிகாரிகள் உள்ளிட்டோருக்கு அழைப்பாணை






(அஸ்லம் எஸ்.மௌலானா, பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது பிரதேசத்திலும் கல்முனையின் சில பகுதிகளிலும் அண்மைக் காலமாக வீசும் துர்வாடையைக் கண்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்காமைக்கு எதிராக கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபை உறுப்பினரும் சுகாதார நிலையியற் குழுவின் தவிசாளருமான சட்டத்தரணி ரொஷான் அக்தர் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். இம்மனுவில் சுகாதாரத்துறை அதிகாரிகள் உட்பட 08 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

திங்கட்கிழமை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட கல்முனை நீதிவான் எம்.எஸ். எம்.சம்சுதீன் எதிர்வரும் 06ஆம் திகதியன்று வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானித்தமையுடன், அன்றைய தினம் நீதிமன்றுக்கு சமுகமளிக்குமாறு, பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்புமாறு உத்தரவிட்டார்.

இந்த குறித்த துர்நாற்றம் தொடர்பில் தீர்க்கமான காரணங்களை இதுவரை கண்டறிந்து எந்த நடவடிக்கையும் எடுக்காமை தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம். றிபாஸ், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் யூ.எல்.எம். நியாஸ், கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஜே.கே.எம் அர்சத் காரியப்பர், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் முஹம்மத் அஸ்மி, கல்முனை மாநகர சபை விலங்கு வைத்தியர் வெட்டபொல, கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சி. அன்சார், அம்பாறை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் மற்றும் குறித்த விடயம் தொடர்பில் சில செய்திகளை எழுதிய பிராந்திய ஊடகவியலாளர் ஆகியோருக்கே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. மனுதாரரான சட்டத்தரணி ரொஷான் அக்தர் சார்பில் சட்டத்தரணிகளான ஆரிப் சம்சுதீன், எம்.எஸ்.ரஸ்ஸாக், ரைசுல் ஹாதி, ஜாவித் ஜெமீல், சுஹால் பிர்தௌஸ் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக சாய்ந்தமருது பிரதேசத்திலும் அண்மைய நாள்களாக கல்முனையின் சில பகுதிகளிலும் மிக மோசமான துர்நாற்றம் வீசி வருகின்ற போதிலும் அத்துர்நாற்றம் எங்கிருந்து வருகின்றது என்பதை துல்லியமாகக் கண்டறியவோ அதனை இல்லாமல் செய்வதற்கோ சந்தேகத்திற்கிடமான இடங்களை முறைப்படி கண்காணிப்புசெய்து, நடவடிக்கை எடுக்கவோ சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறியிருக்கிறார்கள் என இந்த மனுவில் சுட்டிக்காட்டியிருப்பதாக சட்டத்தரணி ரொஷான் அக்தர் தெரிவித்தார்.

இத்துர்நாற்றத்தினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த விவகாரம் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இதற்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே பொது நலன் கருதி 1979ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை கோவையின் பிரிவு 136 (1) (அ) பிரிவின்கீழ் இவ்வழகைத் தாக்கல் செய்திருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பரீட்சை அனுமதி அட்டையை வழங்க மறுத்த அதிபருக்கு எதிராக முறையீடு

(பாறுக் ஷிஹான்)




மாணவி ஒருவருக்கு பரீட்சை எழுதவிடாது பரீட்சை அனுமதி அட்டையை வழங்காமல் அச்சுறுத்திய அதிபருக்கு எதிராக கல்முனை மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி பொது சாதாரண தரப் பரீட்சை நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்துள்ள நிலையில் அம்பாறை மாவட்டம் கல்முனை வலயக்கல்வி பணிமனைக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாணவியின் தந்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸிடம் வழங்கிய முறைப்பாட்டிற்கமைய மாணவிக்கு பரீட்சை எழுதுவதற்கான பரீட்சை அனுமதி அட்டை பெற்றோர் மற்றும் பிராந்திய இணைப்பாளர் ஆகியோரின் முன்னிலையில் அதிபர் வழங்கியமையோடு மன்னிப்புக் கோரிக்கையும் விடுத்துள்ளார்.

இருந்த போதிலும் பரீட்சை அனுமதி அட்டை உரிய நேரத்திற்கு அதிபரினால் வழங்கப்படாமையினால் நேற்று இடம்பெற்ற பரீட்சைக்கு மாணவி தோற்றவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் செவ்வாய்க்கிழமை(இன்று) இடம் பெறவுள்ள பரீட்சைக்கு எனது மகள் தோற்றுவது மகிழ்ச்சி அளிப்பதாகவும் உரிய அதிபருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்தமைக்கு நன்றி செலுத்துவதாகவும் எனது பிள்ளைக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படாதது போன்று மேலும் ஐந்து மாணவர்களுக்கும் வரவு விடயத்தை காட்டி குறித்த அதிபர் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கவில்லை என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என பாதிக்கப்பட்ட மாணவியின் தந்தை குறிப்பிட்டார். இதேவேளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட உரிய தரப்பினரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் மேற்படி விடயம் தொடர்பில் அதிபருக்கெதிராக உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



## உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் தேசிய வேலைத்திட்டம் கல்முனையிலும்

(பைல் இஸ்மாயில்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து எதிர்வருகின்ற காலங்களில் எதிர்கொள்ளப்படவிருக்கும் உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக நாடளாவிய ரீதியில் அரம்பிக்கப்படும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான தேசிய வேலைத்திட்டம் நேற்றுக் கல்முனையில் தொடங்கி வைக்கப்பட்டது. இஸ்லாமாபாத் கிராமத்தில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது. இதில், சேனைக்குடியிருப்பு விவசாய போதனாசிரியர் டீ.செந்தூரன், கல்முனை விவசாய போதனாசிரியர் திருமதி எஸ்.கிரித்தீகா, சமுர்த்தி முகாமையாளர்களான எஸ்.பரீரா மற்றும் வீட்டுத் தோட்டப் பயிர் செய்கை பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பயன்தரும் பயிர் மரக்கன்றுகள், விதை பக்கற்றுக்கள் மற்றும் மரவெள்ளி கிழங்கு தடிகள் என பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

## நடேசனின் நினைவு தினத்தை ஒட்டி மட்டக்களப்பில் 31 இல் கவனவீர்ப்பு

(க.கிருபாகரன்)

மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும், ஆய்வாளருமான ஐயாத்துரை நடேசனின் 18 ஆவது நினைவு தினத்தினை முன்னிட்டு, மட்டக்களப்பு தமிழ் ஊடகவி யலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம் மற்றும் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் தொழிற்சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் எதிர்வரும் 31 ஆம் திகதி (செவ்வாய்க்க்கிழமை) காலை 8.30 மணிக்கு மட்டக் களப்பில் நினைவேந்தல் நிகழ்வும் கவனவீர்ப்புப் போராட்டமும் மேற்கொள்ளப்படவுள்ளன. மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு - மட்டக்களப்பு காந்திப் பூங்கா வளாகத்திலுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள - நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டு, கவனவீர்ப்புப் போராட்டமும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டியும், நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறையைக் கண் டித்தும், தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கக் கோரியும் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நினைவேந்தல் நிகழ்வு மற்றும் கவனவீர்ப்பில் அனைத்து ஊட கவியலாளர்களையும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களையும், பொதுமக்களையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு மட்டக்களப்புத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு.ஊடக அமையம் மற்றும் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் தொழிற்சங்கம் என்பன ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளங்கிக்கொள்ள முடியவில்லை

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளங்கிக்கொள்ள முடியவில்லை. வீழ்ச்சியடைந்துள்ளபொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்றசந்தேகம் தோற்றம்பெறுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரச செலவினங்களை குறைக்க வேண்டிய தருணத்தில் அரசாங்கம் தன் விருப்பம் போல் அமைச்சின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்வது தவறானது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தால் எந்தப்பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பாதுகாக்கவே ரணில் விக்கிரமசிங்க பிரதராக நியமிக்கப்பட்டுள்ளார் என ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க கடந்த வாரம் சமூக வலைத்தளத்துக்கு வழங்கியுள்ள நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

உதயங்க வீரதுங்க ராஜபக்ஷர்களின் உறவினர். ஆகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோட்டா கோ கம போராட்டத்துக்கு துரோகமிழைத்துள்ளார் என்றே கருத வேண்டும்.

சமூக கட்டமைப்பில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் செயற்திட்டத்தை அரசாங்கம் இதுவரை முன்வைக்கவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நடைமுறைக்கு சாத்தியமான எந்தத் திட்டங்களும் கிடையாது. அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத காரணத்தால் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் பணம் அனுப்பலைத் தவிர்த்து வருகிறார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்குப் புறம்பாக தன் கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவை நியமித்துள்ளமை தவறான செயற்பாடாகும். புதிய தலைமைத்துவத்தின் கீழ் நிலையான அரசாங்கத்தை ஸ்தாபிப்பது பொருத்தமானதாக அமையும். அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளங்கிக்கொள்ள முடியவில்லை. வீழ்ச்சியடைந்துள்ளபொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? என்ற சந்தேகம் தோற்றம்பெறுகிறது. – என்றார்.

# மக்களின் பூரண ஆதரவு இன்றி பிரச்சினைகளை தீர்க்கமுடியாது

## வீரசுமன வீரசிங்க தெரிவிப்பு

பொதுத்தேர்தல் ஊடாகவே அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும். மக்களின் ஆதரவு இல்லாமல் எப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது.

முன்னாள் நிதியமைச்சர் பஸில்ராஜபக்ஷவின் தேவைக்கமையவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள் என கம்யூனிஸ கட்சியின் உபதலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் மற்றும் சமூக விவகாரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளதைத் தொடர்ந்து நாட்டு மக்கள் அரசியல் கட்டமைப்பை முழுமையாகப் புறக்கணித்து புதிய அரசியல் கட்டமைப்பை எதிர்பார்க்கிறார்கள்.

பொதுத்தேர்தல் ஒன்று இடம்பெறும் வரை சர்வ கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்குமாறு நாட்டு மக்கள் தொடர்ந்து வலியுறுத்தினார்கள்.

சர்வக்கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சிகள் இணக்கம் தெரிவிக்காத காரணத்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமாயின் அரசியல் ஸ்திரத்தன்மைபேணப்பட வேண்டும் என்ற காரணத்தால் அரசியல் கொள்கைக்கு முன்னுரிமை வழங்காமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் நீக்கப்பட்டுள்ள நிலையிலும் அதன் அழுத்தம் தொடர்ந்து அரச கட்டமைப்பில் பிரயோகிக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கும் மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறவில்லை. மக்களின் ஆதரவில்லாமல் எப்பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நீக்கம், 21 ஆவது திருத்தம் நிறைவேற்றம் தொடர்பில் நாட்டு மக்கள் அதிக அவதானம் செலுத்தியுள்ளார்கள்.

அரசமைப்பு திருத்தம் விவகாரத்தில் மீண்டும் முறைகேடு இடம்பெற்றால் அதுபாரியஎதிர்விளைவுகளை ஏற்படுத்தும். பொதுத்தேர்தல் ஊடாகவே சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் தம்மை தெரிவு செய்த மக்களின் நிலைப்பாடுகளுக்கு மதிப்பளித்து செயற்படுவதை விடுத்து முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவை பாதுகாக்கும் நோக்கில் செயற்படுகிறார்கள்.

தங்களின் எதிர்கால அரசியல் சிறந்த முறையில் அமைய வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு அவர்கள் செயற்பட வேண்டும். -என்றார்.

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் தொழில்நுட்ப கோளாறு சீர்செய்யப்பட்டது

## ஜனக ரத்நாயக்க தெரிவிப்பு



நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு சீர்செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதற்கமைய, இன்று மாலையளவில் 260 மெகாவாட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், நேற்று ஆரம்பமாகியுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் இடம்பெறவுள்ள காலப்பகுதியில் இரவு நேர மின்வெட்டுகளை நடைமுறைப்படுத்துவதில்லை எனத் தீர்மானித்தல் உட்பட குறைந்தபட்ச மின்வெட்டுகளை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னதாக சில அரசியல் அதிகாரிகள் மின்வெட்டு காலம் ஒரு நாளைக்கு 15 மணி நேரம் வரை நீடிக்கப்படலாம் என்று கூறுவதை நாங்கள் பார்த்தோம், பின்னர் வேறு சில அரசியல் பிரமுகர்கள் தடையில்லா மின்சாரம் வழங்குவது தொடர்பாகக் கருத்து தெரிவித்ததைப் பார்க்கிறோம். இந்த இரண்டு கூற்றுகளும் முற்றிலும் ஆதாரமற்றவை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இறுதி வரை, குறைந்தபட்ச குறுக்கீடுகளுடன் மின் உற்பத்தியை எவ்வாறு நிர்வகிப்பது என்பது தொடர்பான போட்டித் திட்டத்தை அரசாங்கத்திற்கு வழங்கும் அதிகாரம் ஆகும்.

குறுக்கீடு இல்லாதது மற்றும் மின்வெட்டு நேரத்தை நீடிப்பது போன்ற பிற கோரிக்கைகள் அனைத்தும் எங்களிடம் கலந்தாலோசிக்காமல் அல்லது முறையான தொழில்நுட்ப பகுப்பாய்வு செய்யாமல் செய்யப்படுகின்றன, என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தடையற்ற மின்சாரத்தை வழங்குவதற்கு எமக்கு மாதாந்தம் 7.5 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான எரிபொருள் தேவைப்படுவதாகவும், அதனை அரசாங்கத்தால் வழங்க முடிந்தால் தடையற்ற மின்சாரத்தை வழங்க முடியும் எனவும் ஜனக ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

# வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு!

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 821 பேர் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த 2021ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுடன் ஒப்பிடுகையில் 286 சதவீதம் அதிகமாகும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 25 ஆயிரத்து 224 பெண்களும் 13 ஆயிரத்து 441 ஆண்களும் உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் மூலம் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு சென்றுள்ளனர்.

இவர்களில் 12 ஆயிரத்து 701 பேர் குவைத்திற்கும், 11 ஆயிரம் பேர் ஐக்கிய அரபு அமீரகத்துக்கும், ஆயிரத்து 754 பேர் தென் கொரியாவிற்கும் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.05.2022இல் வெளியிடப்பெற்றது.